**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி**
**சேலம் மாவட்டம்.**

முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11–ஆம் நாள் புதன்கிழமை

விசுவாசுவ ஆண்டு மாசி மாதம் 27–ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் – 265/2024**
**CNR No. TNSA09-001035-2024**

தமிழ்நாடு அரசுக்காக,
(State of Tamil Nadu, Rep. by,)
காவல் ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்,
குற்ற எண் 170/2024 .....குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1) திரு.ராஜாராம்,(28/2024)
த/பெ. வெங்கடாஜலம்,
சிவகாமி நகர்,
வெள்ளாண்டிவலசு அஞ்சல்,
எடப்பாடி தாலுக்கா,
சேலம் மாவட்டம். ... எதிரி

SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:15 +0530

| S. No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trail | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | Sentence or order | Explanation of Delay |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | | 15 | 16 | 17 |
| 1 | Magudam chavadi P.S Cr.No. 170/2024 under Section 279, 304(A), of IPC. | Raja ram | Venkata chalam | Wages | Sivakami nagar, vellandivalasu post, Edappadi TK, Salem | 28/2024 | 11.06.2024 | 11.06.2024 | 24.06.2024 | 24.06.2024 (Station Bail) | N.A | 09.10.2024 | 11.03.2026 | Nil | 11.03.2026 | N.A |

| | | |
|---|---|---|
| **I.** | Period of Remand of Accused | Nil (Station bail) |
| **II.** | Date of filing of Final Report in Court | 31.07.2024 |
| **III.** | Date of questioning of accused under section 230 B.N.S.S | 09.10.2024 |
| **IV.** | Filing of Miscellaneous petitions and their result | 1. CMP. No.700/2025 - Petition U/s. 311 of Cr.P.C / 348 of BNSS – Allowed dated 15.7.2025.<br><br>2. CMP. No.701/2025 - Petition U/s. 294 (3) of Cr.P.C / 330 (3) of BNSS – Allowed dated 15.07.2025. |
| **V.** | Date of examination in chief and cross-examination of witnesse | (see table below) |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 19.10.2024 | 19.10.2024 |
| PW2 | 22.10.2024 | 22.10.2024 |
| PW3 | 20.06.2025 | 20.06.2025 |
| PW4 | 20.06.2025 | 20.06.2025 |
| PW5 | 23.06.2025 | 23.06.2025 |
| PW6 | 15.07.2025 | 15.07.2025 |



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:23 +0530

| | | |
|---|---|---|
| **VI.** | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S | 23.07.2025 |
| **VII** | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| **VIII** | Grant of stay by superior Court and the result thereof | Nil |
| **IX.** | Final Order | Accused found not guilty for the offences under Section 279, 304(A) of IPC and is **acquitted under Section 271(1) of B.N.S.S.** |

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI**

JUDGMENT IN C.C. NO. 265 OF 2024 ON THE FILE OF THE **JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI**.

PRESENT: **Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A., Judicial Magistrate No.II, Sankari**

(Wednesday, Dated: 11th day of March 2026)

| | |
|---|---|
| Complainant | Inspector of Police, Magudamchavadi. |
| Accused | Rajaram S/o. Venkatachalam |
| Offences | Under Section 279, 304(A) of IPC. |
| Finding | Accused found not guilty for the offences under Section 279, 304(A) IPC. |
| Sentence | Accused is acquitted under Section 271(1) of B.N.S.S for the offences Section 279, 304(A), IPC. |

இவ்வழக்கானது கடந்த 31–07–2024–ம் தேதி இந்நீதின்றத்தில் CC.No. 265/2024–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 10.03.2026–ம் தேதி விசாரணைக்கு வந்த போது, அரசுதரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.என். ரமேஷ்குமார்** அவர்கள்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:31 +0530

முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற

## தீர்ப்புரை

**1.** கடந்த 11.06.2024–ம் தேதி, காலை 09.00 மணிக்கு, மகுடஞ்சாவடி காவல்நிலைய சரகம், சுண்டமேட்டுர் – கொங்கணாபுரம் செல்லும் சாலையில் உள்ள சுண்டமேட்டுர் பஸ் ஸ்டாப் அருகே விபத்தில் இறந்துபோன அங்கமுத்து (எ) அங்குசாமி, என்பவர் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நடந்து கடந்தபோது, மகுடஞ்சாவடி பக்கமிருந்து வந்த ஆஜர் எதிரி TN 30 Y 8013 என்ற பதிவு எண் கொண்ட Omni காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து இவ்வழக்கில் இறந்துபோன அங்கமுத்து என்பவரின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தினால் அங்கமுத்துக்கு தலையின் பின்புறம் மற்றும் வலது காது அருகே இரத்த காயம் ஏற்பட்டு மூக்கிலும், காதிலும் இரத்தம் வந்து அவரை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை செய்து கொண்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் கடந்த 12.06.2024ம் தேதி, மாலை 05.20 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்ததாக கூறி எதிரியின் மீது **சட்டப்பிரிவு 279, 304(A) இ.த.ச.–**பிரிவின் கீழும், தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததாக மகுடஞ்சாவடி காவல் நிலைய



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:40 +0530

காவல் ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A), கீழ் புலன் கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால், இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 207 கு.வி.மு.ச– வின் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி, எதிரியிடம் குற்றங்கள் பற்றி விளக்கி கூறி வினவிய போது, எதிரி குற்றங்களை மறுத்துரைத்தனர். எதிரி குற்றங்களை மறுத்து, வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்ட காரணத்தினால் அரசுதரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. அரசுதரப்பில், பட்டியல் சாட்சிகள்– 06 முதல் 16 வரையிலானவர்களை இவ்வழக்கில், விசாரிக்க வேண்டியதில்லை என்று கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார். **பட்டியல் சாட்சி 15– செல்வி.கவிப்பிரியா, காவல் உதவி ஆய்வாளர்** மற்றும் **பட்டியல் சாட்சி 16 – திரு.S.தங்கவேல், காவல் ஆய்வாளர்,** அவர்கள் பணி இடமாற்றம் பெற்று சென்று விட்டதாலும் அவருக்கு பதிலாக **திரு.மணி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** அவர்களை அரசுதரப்பு பட்டியலில் கூடுதல் சாட்சியாக சேர்ப்பதற்காக



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:46 +0530

பிரிவு 348 of B.N.S.S–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் ஒப்புதல் பெற்ற பின்னர், அரசுதரப்பு சாட்சி 6–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**4.** அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** அரசுதரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனை படித்து காண்பித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரி அதனை பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என்றும் கூறினார்.

**6.** எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.

**7.** அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் மூலமாக, அரசுதரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று அரசுதரப்பில் வாதிடப்பட்டது.

SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:22:53 +0530

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.குப்பாயி | புகார்தாரர். குற்ற சம்பவத்தை பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | திரு.சேகர் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.3 | திரு.முருகன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.4 | திருமதி.சுந்தரம்பாள் | பார்வை மகஜரில் கையெழுத்து சாட்சி. |
| அ.சா.5 | திருமதி.கற்பகம் | பார்வை மகஜரில் கையெழுத்து சாட்சி. |
| அ.சா.6 | திரு.மணி | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி, புலன் விசாரணை செய்ததை பற்றி கூறும் சாட்சி |

Chart for Exhibited Documents:

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் முதலாவது கையெழுத்து | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.5 ன் இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:01 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் | அ.சா.6 |

**8. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரி கடந்த 11.06.2024 ம் தேதி காலை 9.00 மணி அளவில் TN 30 Y 8013 என்ற பதிவெண் கொண்ட Omni காரை வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து திரு. அங்கமுத்து (எ) அங்குசாமி மீது மோதி விபத்து ஏற்படுத்தி, அதன் காரணமாக அவருக்கு தலை, வலது காது மற்றும் மூக்கு ஆகிய உறுப்புகளில் காயம் ஏற்பட்டு அவர் சிகிச்சை பலனில்லாமல் இறந்தார் என்ற விபரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்:**

9. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுதரப்பில், எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A), கீழான குற்றங்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:13 +0530

**அரசுத்தரப்பு சாட்சிகள், தங்களின் முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளனர்:**

**10. அ.சா.1. திருமதி. குப்பாயி** தனது முதல் விசாரணையில், "1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.புதுார் கிராமம், சுண்டமேட்டூரில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 30–06–2024 ம் தேதி, காலை 09.00 மணியளவில் எனது கணவர் எனதுவீட்டிற்கு அருகே சாலையை கடந்தபோது, ஒரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் அறிந்து நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவர் உயிரிழந்துவிட்டதாக சொன்னார்கள்.

2) பின்னர், சம்பவம் தொடர்பாக மகுடஞ்சாவடி போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனது கணவரின் பிரேத விசாரணையில் நானும் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(a). அ.சா.2. திரு. சேகர்**, தனது முதல் விசாரணையில், "நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.புதுார் கிராமம், சுண்டமேட்டூரில் வசித்து வருகிறேன். நான் வாட்டர் போட்டில்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:20 +0530

தண்ணீர் எடுத்துவிடும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 5 மாதத்திற்கு முன்தனாக தேதி, ஞாபகமில்லை, காலை 08.30 மணியளவில் எனது வீட்டிற்கு அருகே ஏற்பட்டு ஒருவர் கீழே கிடந்தார். நான் சத்தம் கேட்டு சென்றுபார்ததபோது விபத்து விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(b). அ.சா.3 திரு. முருகன்** தனது முதல் விசாரணையில், "1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி, சுண்டமேட்டூரில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். கடந்த 11.06.2024 ம் தேதி, காலை 08.55 – 9.10 மணிக்குள் நான் வீட்டில் இருந்தபோது டமார் என்று விபத்து ஏற்பட்டது போல் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து எட்டி பார்த்தேன். கூட்டமாக இருந்தது, நான் பனியன் அணிந்திருந்ததால் வீட்டிற்குள் சென்று சட்டை அணிந்து வெளியில் வந்து பார்த்தேன். அப்போது எனது வீட்டில் எதிரில் வசிக்கும் திரு.அங்கமுத்து என்பவர் அடிபட்டு கிடந்தார்.

2) கொங்கணாபுரம் – மகுடஞ்சாவடி சாலையில் சாலையின் இடதுபுறமாக வெள்ளைக் கோட்டிற்குள் கிடந்தார். நான் உடனே என்னுடைய காரில் ஏற்றிக்கொண்டு எடப்பாடி அரசு



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:28 +0530

மருத்தவமனைக்கு சென்றேன். அவருக்கு தலையில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்னர் வீட்டிற்கு வந்து விசாரித்தபோது ஆம்னி கார் மோதியதாக அருகில் இருந்தவர்கள் கூறினார்கள். அவர் சிகிச்சை பலனின்றி மறுநாள் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(c). அ.சா. 4 திருமதி. சுந்தராம்பாள்** தனது முதல் விசாரணையில், "நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி, சுண்டமேட்டூரில் வசித்து வருகிறேன். நான் குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். சென்ற வருடம் வைகாசி மாதம் 30 அல்லது 31ம் தேதி என்று நினைக்கிறேன், காலை 8.30 மணியளவில் ஆம்னி கார் ஒன்று என்னுடைய உறவினர் அங்குசாமி மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. அன்றைய தினமே போலீசார் வந்து விசாரித்தனர். விபத்து சம்மந்தமாக விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினர். நானும் கற்பகம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(என்னிடம் காட்டப்படும் 1வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(d). அ.சா. 5 திருமதி. கற்பகம்** தனது முதல் விசாரணையில், "நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:41 +0530

காளிகவுண்டம்பாளையம், சுண்டமேட்டுரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் சுண்டமேட்டுர் ரோட்டில் நான் வந்தடைந்தபோது போலீசார் வந்து ஒரு விபத்து வழக்கு சம்மந்தமாக என்னிடம் கூறிவிட்டு, எனது முன்னிலையில் வரைபடம் வரைந்து, என்னிடம் ஒரு கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வம் கையொப்பம் என்னுடையது தான். **(என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(e). அ.சா. 6 திரு. மணி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** "1) நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் கவிப்பிரியா மற்றும் தங்கவேல் காவல் ஆய்வாளர் பணி இடமாற்றம் பெற்று சென்று விட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியதாலும், கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 11.06.2024ம் தேதி, காவல் உதவி ஆயவாளர் நிலைய அலுவலில் இருந்த போது பகல் 12.30 மணிக்கு சேலம் மாவட்டம்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:23:53 +0530

சங்ககிரி தாலுக்கா, அ.புதூர் கிராமம், சுண்டமேட்டூரில் காயம்பட்ட அங்கமுத்து (எ) அங்குசாமி அவர்களின் மனைவி குப்பாயி என்பவர் மேற்படி காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் மகுடஞ்சாவடி காவல் நிலையக் குற்ற எண். 170/2024, சட்டபிரிவுகள் 279, 337 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3) பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் கடந்த 11.06.2024 ம் தேதி 13.30 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சிகள் சுந்தராம்பாள் மற்றும் கற்பகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர், பட்டியல் சாட்சிகள் சுந்தரம்பாள் க/பெ. மாரி மற்றும் கற்பகம் க/பெ. பழனியப்பன் ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:00 +0530

4) பின்னர் புகார்தாரர் குப்பாயி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவ இடத்தில் இருந்த சாட்சி முருகன் மற்றும் சேகர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அரசு மருத்துவமனையில் 12.06.2024 தேதி காயம்பட்ட அங்கமுத்து (எ) அங்குசாமி இறந்து விட்டதாக தகவல் கிடைக்கப்பட்டது, அதன் பேரில் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) மேற்படி வழக்கை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் அன்றைய தினமே சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து இறந்துபோன அங்கமுத்து (எ) அங்குசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் சந்தனதேவன், மாணிக்கம், அமுதா, மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேதத்தை இறப்பின் மருத்துவர் ரீதியான காரணத்தை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் மனுவுடன் காவலர் HC 1248 திரு. தங்கமணி அவரின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

6) பின்னர், அன்றைய தினமே இறந்துபோன அங்கமுத்து (எ) அங்குசாமி என்பவருக்கு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:09 +0530

சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முகம்மதுசிராஜ்இமாம் மற்றும் மணிவாசகம் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)."**

7) மேலும், கடந்த 24.06.2024 வழக்கின் நிமித்தமாக எதிரியை கைதி செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் கடந்த 24.06.2024 ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 30 Y 8013 என்ற பதிவு எண் கொண்ட OMNI Car–ரை, சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார். மேலும் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் **(மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8) அன்றைய தினமே இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கவிபிரியா மற்றும் தங்கமணி தலைமை காவலர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் காவல் ஆய்வாளர் விசாரணையை



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:15 +0530

முடித்து எதிரி மீது கடந்த 05.07.2024 ம் தேதி, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரி கடந்த 11.06.2024 ம் தேதி காலை 9.00 மணி அளவில் TN 30 Y 8013 என்ற பதிவெண் கொண்ட Omni காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து திரு. அங்கமுத்து (எ) அங்குசாமி மீது மோதி விபத்து ஏற்படுத்தி, அதன் காரணமாக அவருக்கு தலை, வலது காது மற்றும் மூக்கு ஆகிய உறுப்புகளில் காயம் ஏற்பட்டு அவர் சிகிச்சை பலனில்லாமல் இறந்தார் என்ற விபரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்:**

**11.(a). அ.சா.1 திருமதி. குப்பாயி,** இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தை பற்றி கூறும் சாட்சி என்றும், **அ.சா.2 திரு.சேகர் மற்றும் அ.சா.3. திரு.முருகன்** ஆகிய இரு சாட்சிகளும் இவ்வழக்கின் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் என்றும், **அ.சா.4 திருமதி. சுந்தராம்பாள் மற்றும் அ.சா.5 திருமதி. கற்பகம்** ஆகிய இரு சாட்சிகளும் இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட

SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:21 +0530

பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்த நபர்கள் என்றும் அரசுதரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.(b). அ.சா.6 திரு.மணி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,** மகுடஞ்சாவடி காவல் நிலையம், தனது முதல் விசாரணையில், அ.சா.1 இவ்வழக்கு விபத்து சம்மந்தமாக கடந்த 11.06.2024-ம் தேதி, பகல் 12.30 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரத்தை பற்றியும், மேற்சொன்ன வழக்கினை பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடம் சென்று, சாட்சிகளின் முன்னிலையில், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்த விபரத்தை பற்றியும், பிறகு, இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்த விபரத்தை பற்றியும், பின்னர் இவ்வழக்கின் காயம் பட்ட திரு.அங்கமுத்து (எ) அங்குசாமி, இறந்தபடியால், இவ்வழக்கின் புலன் விசாரணை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, பிரேத விசாரணை மேற்கொள்ளப்பட்ட விவரத்தை பற்றியும், இறந்துபோன திரு.அங்கமுத்துவின் உடலை பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்சொன்ன பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் மற்றும் பிரேத பரிசோதனை சான்று பெற்ற விவரத்தை பற்றியும், இவ்வழக்கு



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:30 +0530

சம்பவத்தில் தொடர்புடைய நான்குசக்கர வாகனத்திற்கு வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை பெற்ற விவரத்தை பற்றியும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விபரத்தை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:</u>**

**<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:</u>**

**11.(c).** **அ.சா.1,** இவ்வழக்கின் புகார்தாரர் என்ற நிலையில், அவர் தனது முதல் விசாரணையில், இவ்வழக்கு விபத்து சம்பவம் குறித்து தகவல் அறிந்து தான் மருத்துவமனை சென்றதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.2 தனது முதல் விசாரணையில் இவ்வழக்கின் எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது முதல் விசாரணையில் தான் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டதாகவும் தான் வெளியே சென்று பார்த்த போது அங்கு திரு.அங்கமுத்து அடிப்பட்டு கிடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11.(d).** **அ.சா.4 மற்றும் அ.சா.5** ஆகிய இரு சாட்சிகளும் இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரில் கையொப்பமிட்ட நபர் என்று அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.4 தனது முதல் விசாரணையில் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:38 +0530

முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்ததாகவும், தான் சம்பவ இடத்தை அவருக்கு அடையாளம் காட்டியதாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.5 தனது முதல் விசாரணையில், போலிசார் தனது முன்னிலையில் வரைபடம் வரைந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி சாட்சி தனது குறுக்கு விசாரணையில் போலிசார் எதற்காக தன்னிடம் அந்த ஆவணத்தில் கையொப்பம் பெற்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தான் அந்த ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றும்,அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11.(e).** அ.சா.4 –ஐ அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை மேற்கொண்ட போதிலும் அரசு தரப்பிற்கு அனுகூலமான சாட்சியம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. அ.சா.5 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் புலம் விசாரணை அதிகாரிக்கு தான் சம்பவ இடத்தை அடையாளம் காட்டியதாகவோ, அ.சா.4 தன்னுடன் இருந்ததாகவோ, அவரும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாகவோ, சாட்சியம் அளிக்காத நிலையில், அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகிய இரு சாட்சிகளும் இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரை நிரூபிக்கும் வகையில்சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:45 +0530

**11.(f).** அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சிகள் இவ்வழக்கின் எதிரி தான் சம்பவ சமயத்தில் Omni காரை ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளிக்காத நிலையிலும், மேற்சொன்ன விபத்து அவரின் அஜாக்கிரதையாலோ, அதிவேகத்தாலோ அல்லது கவனக்குறைவாலோ ஏற்பட்டது என்ற விபரத்தை அவர்கள் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இறந்து போது திரு.அங்கமுத்து (எ) அங்குசாமி சம்பவ இடத்தில் ரோட்டை கடக்க Zebra level crossing – ஐ பயன்படுத்தினார் என்ற விபரத்தை அவர்களின் சாட்சியத்தில் கூறவில்லை.

**11.(g)** அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண்ணைக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1ல் **TN 30 Y 8013** என்ற பதிவெண் கொண்ட Omni வாகனம் தான் விபத்தை ஏற்படுத்தியதாக அ.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, வழக்கு குற்ற சம்பவத்தில் தொடர்புடைய வாகனத்தின் பதிவு எண் **TN 30 Y 8013** என்ற பதிவெண் கொண்ட Omni வாகனம் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்ற ஐய்யம்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:51 +0530

இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

**11.(h).** மேலும், இவ்வழக்கில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய சாட்சிகளை அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவித்து குறுக்கு விசாரணை மேற்கொண்ட போதிலும் அரசுத்தரப்பிலும் அனுகூலமான சாட்சியம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பகுப்பாய்வு செய்ததில், இவ்வழக்கின் எதிரி தான் சம்பவ சமயத்தில் மேற்சொன்ன Omni காரை ஓட்டி விபத்து ஏற்படுத்தினாரா என்ற ஐயமும் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

**11.(I)** அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி தான் சம்பவ சமயத்தில் மேற்சொன்ன நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ, கவனக்குறைவாகவோ ஓட்டி வந்து திரு.அங்கமுத்து என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்ற விவரத்தை அவர்களின் சாட்சியத்தில் கூறவில்லை. மேற்சொன்ன சாட்சிகள் சம்பவத்தை அவர்கள் நேரில் பார்த்ததை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காத நிலையிலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான அரசு தரப்பு சாட்சிகள் சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் வந்தது என்று சாட்சியம் அளிக்காத நிலையில், மேற்சொன்ன



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:24:57 +0530

சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்தார்களா என்ற ஐயம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

**11.(j).** இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரான அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடமான அ.சா.ஆ.6–ல், மேற்படி நான்கு சக்கர வாகனத்தின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவ இடத்தில் பதிந்துள்ளதாகவோ, இவ்வழக்கில், தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் மேற்சொன்ன நான்குசக்கர வாகனத்தின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவயிடத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவோ, இவ்வழக்கின் எதிரி, எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் அதிவேகமாக சம்பவ சமயத்தில் மேற்சொன்ன வானத்தை ஓட்டி வந்தார் என்ற விபரத்தை பற்றியோ, அரசுதரப்பு சாட்சிகள், தங்களின் சாட்சியத்தில் குறிப்பிடவில்லை. இவ்வழக்கில், நான்குசக்கர வாகனத்தின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவயிடத்தில், பதிவு செய்யப்பட்டிருந்தால், அதனை கொண்டு மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாக ஓட்டினார் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வர இயலும். ஆனால், இவ்வழக்கில், சம்பவயிடத்தில், மேற்சொன்ன சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) அரசுத்தரப்பால் வழக்கு ஆவணங்களில் குறியீடு செய்யப்படவில்லை.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:04 +0530

**11.(k).** அரசுதரப்பு சாட்சிகள், இவ்வழக்கின் எதிரி ஓட்டி வந்த Omni நான்குசக்கர வாகனம், சம்பவ சமயத்தில், எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் வந்தது என்றோ, சம்பவயிடத்தில், எவ்வளவு வேகத்தில் வாகனங்களை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற போக்குவரத்து விதியை பற்றி தங்களது சாட்சியத்தில் கூறவில்லை. மேலும், ஒருவர் தனது வாகனத்தை, வேகமாக இயக்கினார் என்பதை மட்டும் கொண்டு, மேற்சொன்ன நபர் அதிவேகமாக மற்றும் அஜாக்கிரதையாக தனது வாகனத்தை இயக்குகிறார் என்று இந்நீதிமன்றம் கருத இயலாது, ஏனெனில், வாகனம் என்பது ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக செல்லத்தான் பயன்படுத்தப்படுகிறது என்ற நிலையில், சம்பவயிடத்தில், போக்குவரத்து விதிகளின் படி, எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் செல்லவேண்டும் என்று அரசுதரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் எதிரி, சம்பவயிடத்தில் எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் சென்றார் என்ற விபரத்தை அரசுதரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் எதிரி, அதிவேகமாக தனது வாகனத்தை இயக்கினார் என்று அரசுதரப்பு சாட்சிகள் ஊர்ஜீதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.(l).** இவ்வழக்கில், திரு.அங்கமுத்துக்கு விபத்து சம்பவத்தினால் காயம் ஏற்பட்டு அதன் காரணமாகத்தான் இறந்துள்ளார் என



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:11 +0530

அ.சா.ஆ.8 – பிரேத பரிசோதனை சான்றின் வாயிலாகவும் மற்றும் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களின் வாயிலாகவும் இந்நீதிமன்றம் அறியப்பெற்றாலும், மேற்சொன்ன எதிரியின் அஜாக்கிரதையின் காரணத்தாலோ, அதிவேகத்தாலோ, கவனமின்மையாலோ எதிரி அவர் ஓட்டிச்சென்ற மேற்படி வாகனத்தினால் தான், மேற்சொன்ன விபத்து ஏற்பட்டு, திரு. அங்கமுத்து என்பவருக்கு காயம் ஏற்பட்டு அவர் இறந்தார் என்ற விவரத்தையோ ஊர்ஜீதப்படுத்தும் வகையில் அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியம் அமையப்பெறவில்லை.

**11.(m).** இ.த.ச பிரிவு 304(A)–ன் படி எதிரியை குற்றவாளி என கருத வேண்டுமானால், மேற்சொன்ன எதிரி தன் வாகனத்தை அஜாக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, பொறுப்பற்ற தன்மையுடன் கவனக்குறைவாக ஓட்டினார் என்றோ, அதனால்தான் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டது என்பதை அரசுதரப்பு நிரூபிக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில், அரசுதரப்பு, எதிரி எவ்வாறு அஜாக்கிரதையாக செயல்பட்டார் என்றோ அல்லது எவ்வளவு கிலோமீட்டர் வேகத்தில் அதிவேகமாக சென்று, மேற்சொன்ன விபத்தை ஏற்படுத்தினார் என்றோ அல்லது எதிரி எவ்வாறு பொறுப்பற்ற தன்மையுடன் செயல்பட்டு, அதனால் மேற்படி விபத்து ஏற்பட்டு, மேற்சொன்ன, திரு.அங்கமுத்து (எ) அங்குசாமி, என்பவர் உயிர் இழந்தார் என்பதை பற்றியோ, அரசுதரப்பு சாட்சிகள் சரிவரவும்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:18 +0530

சந்தேகத்திற்கிடமின்றியும் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.(n).** இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.6, அளித்த சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது, நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தினால், இவ்வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.(o).** மாண்புமிகு. டெல்லி உயர்நீதிமன்றம் Kishore Chand Joshi –Vs– The State on 12 November 2018 பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பில்,

14. The petitioner was apprehended at the spot by PW-1 and PW-2,who were stated to be present at the time of the accident. They have identified the petitioner at the time of Trial.

15. The prosecution has relied on the testimony of PW-1 and PW-2 as the two eye-witnesses. PW-1 in his testimony has not stated as to whether the vehicle was being driven in a fast manner or what was the manner in which the vehicle was being driven. PW-2 in his testimony has stated that the vehicle was being driven by the petitioner in rash and negligent manner.

16. PW-2 has given his opinion about the manner of driving. Rash and negligent manner is an opinion which may vary from person to person depending on the



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:26 +0530

perception of an individual. What may be “rash and negligent” for one may not be “rash and negligent” for another. For one person, driving at a speed of 80 may be high speed and rash and negligent and for another it may not be.

17. A witness can depose as to the manner of driving or speed at which the vehicle was being driven but not render an opinion on “rash and negligent”. High speed by itself may not in each case be sufficient to hold that a driver is rash or negligent. Speed alone is not the criterion for deciding the rashness or negligence on the part of the driver.

18. In the present case, PW-1 in his testimony has not stated anything as to how the vehicle was being driven. There is no mention as to whether the vehicle was being driven at a high speed or in a manner which may be construed as “rash and negligent” by the Court. PW-2 also has given his perception that the vehicle was being driven in a rash and negligent manner. No skid marks or tyre marks have been obtained of the spot to indicate that the vehicle was being driven at a high speed.

21. Reference may be had to the judgment of a Coordinate Bench Ram Chander vs. State : 2017[4] JCC 2676 of this Court in Abdul Subhan vs. State (NCT of Delhi): 133 (2006) DLT 562, wherein, this Court has held that to be punished under Section 304A IPC, a point to be established is that the act of the accused was responsible for the death and such act must have been rash and negligent and the prosecution has to prove the commission of rash and negligent act. The court relied upon the decision of the Orrisa High Court in Badri Prasad Tiwari Vs. The State: 1994 Cri L J 389, wherein the Court had held that a bald statement of a witness that the vehicle was being driven at a high speed does not ipso facto establish rash and negligence conduct.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:32 +0530

22. Keeping in view the facts and circumstances of the case and on perusal of the records, I am of the view that the prosecution has filed to prove beyond reasonable doubt that the conduct of the petitioner was rash and negligent and the petitioner is guilty of having committed offence under Section 304 A/279 IPC by causing death of the victim. Learned counsel for the petitioner has been able to show that there is reasonable doubt as to whether the accident was caused on account of the act of the petitioner and said act was rash and negligent. Accordingly, I am of the view that the judgments of the Trial Court as well as the Appellate Court suffers from Infirmities.

23. In view of the above, giving benefit of doubt to the petitioner, the impugned order dated 07.05.2016 of the Appellate Court as also the order of conviction dated 29.10.2015 and order on sentence dated 29.01.2016 of the trial court are set aside. The petitioner is acquitted of charges punishable under Sections 279/304 A IPC **என்று தீர்ப்பு அளித்துள்ளது. மேற்படி முன்தீர்ப்பு இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது**.

**11.(p).** **மேலும், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான இ.த.ச. பிரிவு 279, 304(A)–ஐ அரசு தரப்பு சாட்சிகள் ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இவ்வழக்கின் எதிரிதான் சம்பவ நாளன்று, சம்பவ இடத்தில் TN 30 Y 8013 என்ற பதிவு எண் கொண்ட Omni நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி, விபத்து**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:38 +0530

ஏற்படுத்தி, திரு. அங்கமுத்து (எ) அங்குசாமிக்கு பலத்த காயம் ஏற்படுத்தி அதனால் அவர் உயிரிழந்தார் என்ற விபரத்தை, அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. இவ்வழக்கில், அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2, மற்றும் அ.சா.3 சாட்சிகளை பிறழ் சாட்சிகள் என்றும், அ.சா.4 பகுதியளவு பிறழ்சாட்சி என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்த படி, எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளான இ.த.ச பிரிவுகள் 279, 304(A), கீழான குற்றங்களை அரசுதரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், மேற்சொன்ன எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களான இ.த.ச பிரிவுகள் 279, 304(A), கீழ் அவர் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்தும், மேற்சொன்ன, எதிரி B.N.S.S பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில், வழக்கு சொத்து ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

**14.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, எதிரி பிணையில் சென்றுள்ளனர். இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரங்கள் ரத்தாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:49 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:25:58 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசுதரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுதரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திருமதி. குப்பாயி **(புகார்தாரர்)** |
| அ.சா.2 | திரு. சேகர் |
| அ.சா.3 | திரு. முருகன் |
| அ.சா.4 | திருமதி. சுந்தராம்பாள் |
| அ.சா.5 | திருமதி. கற்பகம் |
| அ.சா.6 | திரு. மணி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:**

| அரசுதரப்பு சான்றாவணங்–களின் வரிசை | தேதி | அரசுதரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.06.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 22.10.2024 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4–ன் 1 வது சாட்சி கையொப்பம். |
| அ.சா.ஆ.3 | 20.06.2025 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5–ன் |

| | | |
|---|---|---|
| | | 2 வது சாட்சி கையொப்பம். |
| அ.சா.ஆ.4 | 11.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 11.06.2024 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.6 | 15.07.2025 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.7 | 12.06.2024 | சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 13.06.2024 | பிரேத பரிசோதனை சான்று |
| அ.சா.ஆ.9 | 24.06.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை. |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருள்கள்:</u>**

–இல்லை–

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

–இல்லை–

**<u>பிற்சேர்க்கை</u>**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தனர்.
2. வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு அரசுதரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச்சொத்து தாக்கல் செய்யப்படவில்லை.
5. முடிவில், எதிரிகளுக்கு, B.N.S.S பிரிவு 271(1)–ன் படி விடுதலை வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.03.11 17:26:05 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**Judgment uploaded online on 11.03.2026.**

**CC.No. 265/2024**